**வெலிகம நகர சபை - 2023**

**------------------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வெலிகம நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 181(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, வெலிகம நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 639,000 தொகை பெறுமதியான 06 இயந்திர உபகரணங்கள் பௌதீக ரீதியாக காணப்படாததுடன், அதன் தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரியாக கணக்கீடு செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | இரண்டு செயற்படாத நடைமுறைக் கணக்குகளின் மீதிகள் உறுதிப்படுத்தும் சான்றிதழின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,514 தொகை எனினும், அதனை ரூபா 119,417 இற்கான மேலதிக பற்று என காட்டப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரியாக கணக்கீடு செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 32 வர்த்தக நிறுவனங்களில் இருந்து கிடைக்க வேண்டிய வர்த்தக வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 361,388 தொகையினை கணக்கீடு செய்திருக்காததுடன், 02 வருமானத் தலைப்புக்களின் கீழ் பெற வேண்டிய வருமானம் ரூபா 459,021 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரியாக கணக்கீடு செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பாதையொன்று அபிவிருத்திக்காக செலுத்த வேண்டியிருந்த ரூபா 976,275 தொகையினை கடன் கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரியாக கணக்கீடு செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | சபைக்குச் சொந்தமான மின்சார பண்டங்கள் மற்றும் ரன்பொஹொனிய மீதி இருப்புப் பெறுமதி ரூபா 836,873 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரியாக கணக்கீடு செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் 16 ஆரம்ப மீதி விடயங்களுக்கான நாட்குறிப்புப் பதிவின் பெறுமதி மற்றும் பேரேட்டு மீதிகளிடையே ரூபா 21,338,901 இற்கான வித்தியாசம் ஒன்று மற்றும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 02 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 4,946,077 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | எதிர் காலத்தில் இவ்வாறான வழுக்கல் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 27,215,722 தொகைக்கான 08 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை செய்வதற்கு முடியாமல் இருந்தது. | பதிவேடுகள் நாளதுவரை ஆக்கப்படும் எனவும், அட்டவணைகளை கண்டுகொள்ள முடியாதுள்ளது எனவும். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

1.7 இணங்காமை

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | i. நி.பி. 571 | 02 வருடங்களை மிகைத்துள்ள கூட்டுப் பெறுமதி ரூபா 1,658,628 தொகை பெறுமதியான 54 வைப்பு மீதிகளை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களின் இணங்க செயற்பட வேண்டும். |
| | ii. நி.பி. 772(1) | பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்த 11 பழுதடைந்த பண்ட விடயங்கள் மற்றும் அழிக்கப்பட வேண்டிய 32 பண்ட விடயங்களை அழிப்பதற்கு அல்லது ஏலவிற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் அப்புறப்படுத்துவற்கு அல்லது ஏலவிற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களின் இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2018 ஒக்தோபர் 10 திகதிய இலக்கம் 03/2018 கொண்ட வாகன முகாமைத்துவ சுற்றறிக்கை | 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது அப்புறப்படுத்தியிருந்த 02 வாகனங்களின் பதிவினை இரத்துச் செய்வதற்காக சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாகனங்களை அப்புறப்படுத்தும் போது பதிவினை இரத்துச் செய்து வாகனங்களை அப்புறப்படுத்தல் மேற்கொள்ளும் படி உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 9,496,600 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 22,120,182 தொகையாகும்.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நீண்ட காலம் முதல் செயற்படாத நிலையில் காணப்பட்ட ரூபா 119,417 இற்கான மேலதிக பற்றொன்றென காட்டப்பட்டிருந்த 02 வங்கிக் கணக்குகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | வித்தியாசத்திற்கான காரணங்களை கண்டறிந்து தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் மீதிகளை சரியாக கணக்கீடு செய்யப்படும் என. | செயற்படாத வங்கிக் கணக்குகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| வருமான மூலம் | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 15,350,000 | 15,802,122 | 15,248,126 | 13,294,637 | 15,300,000 | 12,384,551 | 12,089,483 | 12,740,641 |
| வாடகை | 29,264,000 | 24,603,277 | 25,239,861 | 20,280,675 | 22,576,000 | 22,544,981 | 19,830,187 | 20,917,259 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 4,314,500 | 10,354,532 | 9,801,932 | 889,059 | 8,463,000 | 5,427,875 | 5,641,995 | 336,459 |
| ஏனைய வருமானங்கள் | 15,473,000 | 11,815,334 | 11,852,035 | 812,192 | 17,494,000 | 12,741,299 | 13,200,373 | 848,893 |
| மொத்தம் | 64,401,500 | 62,575,265 | 62,141,954 | 35,276,563 | 63,833,000 | 53,098,706 | 50,762,038 | 34,843,252 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 4889 வீதவரி அலகுகள் தொடர்பாக ரூபா 12,316,720 இற்கான மீதியொன்று காணப்பட்டது. | நடமாடும் சேவைகள் நடாத்துதல், சிவப்பு அறிவித்தல் அனுப்புதல், வெளிக்களத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் மூலம் நிலுவை வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 228 கடையறைகளில் இருந்து அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட கடை வாடகை ரூபா 10,841,916 தொகை காணப்பட்டதுடன், அந்த நிலுவை மீதியில் 02 வருடங்களை மிகைத்துள்ள 113 கடையறைகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 4,250,021 இற்கான மீதியொன்று காணப்பட்டது. | வெளிக்கள உத்தியோகத்தர்களின் மூலம் நிலுவை கடை வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும். | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | சபைக்குச் சொந்தமான 02 வர்த்தக கட்டிடத் தொகுதிகளை சேர்ந்த 06 கடையறைகள் பயன்படுத்தப்படாமல் மூடப்பட்டு காணப்பட்டது. | கடையறைகளின் திருத்த வேலைகளை மேற்கொண்ட பின்னர் டெண்டர் பண்ணுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என. | கடையறைகளை வாடகைக்கு கொடுப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் தபபா/பபாகொ/2010/01 மற்றும் 2010 திசெம்பர் 27 திகதிய சுற்றறிக்கையின் 05 பந்திக்கு இணங்க சபைக்கு சொந்தமான 13 கடையறைகளுக்காக கடை உரிமையாளருடன் சட்டரீதியான உடன்படிக்கை மேற்கொள்ளாமல் வாடகைக்கு கொடுத்திருந்ததுடன், அதன் கால வீச்சு 39 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட காணப்பட்டது. அதேபோல் அணுகியிருந்த உடன்படிக்கை 03 வருடங்களுக்கு ஒருமுறை நாளதுவரை ஆக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 77 கடையறைகள் தொடர்பாக உடன்படிக்கைக் காலம் முடிவடைந்து 04 மாதங்களுக்கும் 12 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்தது. | தொடர்ச்சியாக கடிதங்களின் மூலம் அறிவுருத்தல் மேற்கொள்ளப்பட்டதுடன், சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மற்றும் உடன்படிக்கையை நாளதுவரையாக்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்படும் என. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (உ) | மேற்கூறிய சுற்றறிக்கையின் 04 ஆவது பந்திக்கு இணங்க சபைக்கு சொந்தமான 03 வர்த்தக கட்டிடத் தொகுதிகளை சேர்ந்த 03 கடையறைகளின் ஒரே தடவையில் பெறும் பணம் ரூபா 487,500 தொகை அறவீடு செய்திருக்காததுடன், 11 ஆவது பந்திக்கு இணங்க வேறு தரப்பினர்களினால் பயன்படுத்தப்படும் சபைக்குச் சொந்தமான 02 வர்த்தக கட்டிடத் தொகுதிகளைச் சேர்ந்த 04 கடையறைகள் பதிவு செய்யப்பட்டுள்ள வாடகையாளருக்கு | ஒரே முறையில் செலுத்தும் பணத்தை பெற்றுக்கொள்வதற்காக தொடர்ச்சியாக கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டது என மற்றும் எதிர் காலத்தில் உரித்தாக்குவதற்கு அல்லது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | 02 கடையறைகளின் கடை வாடகை பெறுமதி மதிப்பீடு முடிவடைந்து 16 வருடங்களை கடந்திருந்த போதிலும், அதனை நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடையறைகளின் திருத்த வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், திருத்த வேலை முடிவடைந்த பின்னர் புதிய பெறுமதி மதிப்பீடு பெற்றுக்கொள்ளப்படும் என. | பெறுமதி மதிப்பீடு நாளதுவரை ஆக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | 02 வர்த்த கட்டிடத் தொகுதிகளைச் சேர்ந்த 10 கடையறைகள் பல்வேறு காரணங்களினால் பயன்படுத்தப்படாமல் மூடப்பட்டிருந்ததுடன், அவற்றிலிருந்த ரூபா 1,306,860 இற்கான நிலுவை கடை வாடகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | சில கடையறைகள் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது எனவும், திருத்த வேலைகள் மேற்கொண்ட பின்னர் மீண்டும் டெண்டர் பண்ணுவதற்கு நிதிக் குழுவினால் அங்கீகாரம் கிடைத்துள்ளது. | சபைக்குச் சொந்தமான அனைத்து கடையறைகளையும் பயன்படுத்த வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் சாட்டப்பட்டுள்ள கருமங்களை மேற்கொள்ளல்

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விற்பனை செய்ய முடியாத உக்காத குப்பைகளை அகற்றுவதற்காக சபையிடம் முறையான வேலைத் திட்டமொன்று காணப்படாமையால் அவற்றை சேதனப் பசளை செயற்கள வளவில் போடப்பட்டு மண்ணினால் முடப்பட்டிருந்ததுடன், அங்கு சேகரமாகும் இலத்திரனியல் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக முறையான வேலைத் திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை. | பிளாஸ்டிக் மீள்சுழற்சி செய்யப்படுவதுடன், ஏனைய குப்பைகள் விற்பனை செய்யப்படுவதுடன் மீதியான குப்பைகளுக்காக எதிர்காலத்தில் முறையான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்படும் என. | முறையான குப்பை முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டமொன்று செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | கப்பரத்தொட்ட, பாமன் ஏகல காணியில் நடாத்திச் செல்லப்பட்ட சேதனப் பசளை செயற்திட்டம் பிளாஸ்டிக் மீள்சுழற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | குப்பை முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்திற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு மீளளிப்பு செய்ய வேண்டிய ரூபா 9,541,702 இற்கான பங்களிப்புத் தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட உறுதிப்படுத்தல்கள் கிடைத்த பின்னர் மீதித் தொகைக்கான கொடுப்பனவு மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1993 ஆண்டின் போது சபையின் பொது அலுவல்களுக்காக சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த 05 ரூட் 04 பர்சஸ் காணிப் பகுதிக்கு அடுத்த காணிக்காரர்களினால் எல்லை வேலிகளை அகற்றி பயன்படுத்தப்பட்டு வருவதுடன் வேறு தரப்பினர் ஒருவரினால் இலகு வீடொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. சபையினால் இந்த அங்கீகாரமற்ற பயன்படுத்தல் தொடர்பாக சட்ட செயற்பாடுகள் மேற்கொள்வற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணிகளை நில அளவை செய்து எல்லை வேலிகளை அடையாளமிட்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சபைக்கு சொந்தமான காணிகளை தீர்த்துக்கொள்ள வேண்டும். |
| (இ) | 2002 ஆண்டில் செயற்படுத்தப்பட்டிருந்த பியவர முன்பள்ளிச் செயற்திட்டத்தின் கீழ் வெலிகம நகர சபை அதிகார பிரதேசத்தில் சுனாமியினால் இடம் பெயர்ந்த சிறுவர்களின் மேம்பாட்டிற்காக ரூபா 6 மில்லியன் தொகையொன்று செலவிடப்பட்டு 05 வகுப்பறைகளைக் கொண்ட மற்றும் 05 கழிவறைகளை கொண்ட 100 சிறுவர்களுக்கு கல்வி பயிலக்கூடிய வசதியுள்ள ஜெயவிகும்கம முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2023 நவம்பர் 03 திகதி மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள பரிசோதனையின் போது இந்த கட்டிடத்தின் கதவுகள் உடைந்து, கூரை பழுதடைந்து உட்பகுதிகள் நனைவதனால் சுவர்களில் சேதங்கள் ஏற்பட்டிருந்ததுடன், அதில் ஒரு பகுதியில் அங்கீகாரமற்ற வெளித் தரப்பினர்கள் வசித்து வந்தனர். இந்த முன்பள்ளி கட்டிடத்திற்கு தேவையான செப்பனிடல்கள் மேற்கொள்ளப்பட்டு அதனை பாதுகாத்துக்கொள்ளல் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்காததுடன், நீண்ட காலமாக கைவிடப்பட்டு அழிவடைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | அங்கீரமற்ற வதிவோருக்கு அகன்று செல்லும் படி எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது எனவும், அகன்று செல்லாவிடின் எதிர் காலத்தில் சட்டச் செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சபைக்குச் சொந்தமான ஆதனங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி கட்டளைகள்/ பிரமாணங்கள் அடங்கிய 2021 ஜூலை 08 திகதிய 2235/54 இலக்கங் கொண்ட வர்த்மானி அறிவித்தலின் பிரிவு 28(1) ஏற்பாடுகளுக்கு புறம்பாக நிர்மாணிக்கப்பட்டிருந்த 03 கட்டிடங்களுக்காக அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் பெற்றிருக்காததுடன், அவற்றில் 02 கட்டிடங்களில் வாகனங்கள் நிறுத்துவதற்காக விதிக்கப்பட்டுள்ள இட வசதிகள் ஒதுக்கப்படாமல் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதேபோல், மேற்கூறிய அறிவித்தலுக்கு இணங்க புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருந்த 02 கட்டிடங்களுக்காக அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டிருந்தற்கான தகவல்கள் சமர்ப்பித்திருக்காததுடன், இங்கு கட்டிடங்களின் எல்லையை மீறும் வகையில் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டதெனவும், எதிர் காலத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | வெலிகம, கொஹுனுகமுவவில் வசிக்கும் நபர் ஒருவரினால் வீதவரி இலக்கம் 354/21 என்ற இடத்தில் 214.68 சதுரமீற்றர் அளவான மூன்று மாடி வர்த்தக மற்றும் வதிவிட கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்காக அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. இந்த கட்டிடத்தை பரிசோதனை செய்த போது சிரிமாவோ பண்டாரநாயக மாவத்தை மத்தியில் இருந்து 50 அடி வரையறையினுள் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், கட்டிடத்தின் பின் பக்க எல்லையில் இருந்து கட்டிட எல்லையுள் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், மூன்று மாடிக் கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், நான்காவது மாடி நிர்மாணிப்பதற்கா | கடிதங்களின் மூலம் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை முறைப்படுத்திக் கொள்ளும் படி அறிவுறுத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவ்வாறு நடைபெறாவிட்டால் சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொங்கிரீட் தூண்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | பெலேன சுற்றுவட்டத்திற்கு முன்பக்கமாக நான்கு மாடி வர்த்தகக் கட்டிடம் ஒன்றிற்காக 2023 ஒக்தோபர் 24 திகதி அபிவிருத்தி அனுமதிப்பத்திரமொன்று வழங்கியிருந்ததுடன், 2023 நவம்பர் 03 திகதி தெரிவு வெளிக்கள பரிசோதனையின் போது 04 மாடிகளைக் கொண்ட 18.60 x 7.40 மீற்றர்கள் அளவான கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2023 ஒக்தோபர் 24 திகதி வரைவினை அங்கீகரிக்கும் சந்தர்ப்பம் அளவிலும் அங்கீகாரம் இன்றி இந்த கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த காணக்கூடியதாக இருந்தது. அங்கீகரிக்கப்பட்ட வரைபில் வாகனங்கள் நிறுத்துவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த தரைப் பகுதி அடங்கக்கூடியவாறு அங்கீகரிக்கப்பட்ட வரைபுக்கு இணக்கமின்றி இந்தக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | வெளிக்களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக 2024 பெப்ரவரி 08 திகதிய கடித்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதெனவும், மீண்டும் நினைவூட்டல் கடிதமொன்று வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச / உள்ளூராட்சி முகாமைத்துவ சேவை சங்கத்தினால் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற மாநாட்டுக்காக வெலிகம நகர சபையின் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கு தேவையான போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக முன்னைய மற்றும் மீளாய்வாண்டின் போது வாடகை அடிப்படையில் பெற்றிருந்த பஸ் வண்டிகளுக்காக ரூபா 406,400 இற்கான தொகையொன்று சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. தாபனக் கோவை, நிதிப்பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் மூலம் இவ்வாறான கொடுப்பனவிற்காக எதுவித சட்ட ஏற்பாடுகளும் காணப்படாத போதிலும், இவ்வாறாக தொழிற்சங்க மாநாடுகளுக்கு உத்தியோகத்தர்கள் பங்குபற்றுவதற்கான போக்குவரத்து | ஆளுனரின் மற்றும் பிரதான செயலாளரின் அங்கீகாரக் கடிதத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | தாபனக் கோவை, நிதிப்பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வசதிகள் வழங்குவதற்காக தனியார் தரப்பினருக்கு சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்தல் சட்டரீதியான கொடுப்பனவு அல்ல என அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | முகாமைத்துவ சேவையின் பெண் உத்தியோகத்தர் ஒருவருக்கு நிதிப் பிரமாணம் 237 இற்கு புறம்பாக சபையின் கடமைகளுக்காக மீளாய்வாண்டின் பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்காக ரூபா 93,880 இற்கான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. அந்தப் பெண் உத்தியோகத்தர் மீளாய்வாண்டு இறுதித் தினத்திலும் சேவைக்க வந்திருக்காததுடன், ரூபா 286,224 இற்கான சம்பள மற்றும் இடர் கடன் மீதியொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | அறவிடப்பட வேண்டிய சம்பளம் மற்றும் இடர் கடன் மீதி குறிப்பிட்ட உத்தியோகத்தரிடம் அறவீடு செய்வதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், குறிப்பிட்ட கொடுப்பனவை செலுத்தாமை புறக்கணித்தல் சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | 2021 ஆண்டின் போது கொஹுனுகம, தெனியவத்த இலக்கம் 59/1 என்ற இடத்தில் பாதைக்கு முற்றுக் கட்டையான முறையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மதில் ஒன்றினை உடைத்து அகற்றுவதற்கு எதிராக சபையின் பெண் தொழினுட்ப உத்தியோகத்தருக்கு எதிராக மூன்றாம் தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் பெண் உத்தியோகத்தருக்கு பிரதிகூலமான தீர்ப்பொன்று வழங்கியிருந்ததுடன், அதற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 71,200 இற்கான சட்ட வரைஞர் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பெண் உத்தியோகத்தரினால் மேற்முறையீடொன்று சமர்ப்பிக்கப்பட்டு இருந்ததென அறிவிக்கப்பட்ட போதிலும் அது தொடர்பாக விபரங்கள் சபையில் காணப்படவில்லை. | இருதரப்பினர் இடையே தனிப்பட்ட வழக்கொன்று நடைபெறுவதினால் நகர சபைக்கு தற்போதைய நிலைமை தொடர்பாக வேறேதும் தகவல்கள் காணப்படவில்லை என. | ஆவணங்கள், கோவைகள் நாளதுவரையாக பேணிச் செல்ல வேண்டும். |

### 3.5 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கப்பரதொட்ட பாமன் ஏக்கல காணியில் நடாத்தப்பட்டு வந்த சேதனப் பசளை செயற்களத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த நிலக்கீழ் உயிர்வாயு அலகு தற்போது செயற்படாத நிலையில் | உயிர் வாயு அலகினை மீண்டும் திருத்த வேலை மேற்கொண்டு செயற்படுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய | விரைவாக திருத்த வேலை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டதுடன், அந்த உயிர்வாயு அலகு தொடர்பாக தகவல்கள் ஏதும் சபையில் காணப்படவில்லை. | பயன்பாடுகள் தொடர்பாக சாத்தியக்கூறு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு அதன் பின்னர் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என. | |
| (ஆ) | வெலிகம நகர சபைக்கு சொந்தமான 04 ஆதனங்கள் ஆக்கபூர்வமான கருமங்கள் எதற்கும் பயன்படுத்தாமல் பராமரிக்கப்படாமல் விளைவற்றுக் காணப்படுவதால் ஆதனங்கள் அழிவடையக்கூடிய நிலையில் காணப்பட்டது. | திருத்த வேலைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | விரைவாக திருத்த வேலை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2012 ஆண்டின் போது சபைக்குச் சொந்தமான சேதனப் பசளை செயற்களத்தின் ஒரு பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்த ரன்பொஹொனிய விற்பனை நிலைய வளவில் காணப்படும் 16 பல்வேறு சொத்து அலகுகள் எவ்வித பயன்பாட்டுக்கும் எடுக்கப்படாமல் காணப்படுவதுடன் அந்த காணியில் காடுகள் வளர்ந்து அந்த நிர்மாண வேலைகள் அழிவடைவதற்கு ஆளாகியிருந்தது. மேலும், 136.56 சதுர மீற்றர்களுக்கான இரண்டு மாடிக் கட்டிடத்தின் நிர்மாண வேலைகளை விரைவாக பூர்த்தி செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து தற்போது சிதைவடைந்த நிலையை அடைந்துள்ள ரன்பொஹொனிய விற்பனை நிலையம் நடாத்திச் செல்லப்படும் கட்டிடத்தையும் திருத்த வேலை மேற்கொண்டு விற்பனை விடயங்களை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்தப்படாத சொத்துக்களை எதிர் காலத்தில் ஆக்கபூர்வமான பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் உரிய முறையில் பராமரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | சபைக்குச் சொந்தமான ரூபா 24,700,000 தொகை பெறுமதியான 04 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் மீளாய்வாண்டு இறுதியளவிலும் திருத்த வேலைகள் மேற்கொள்வதற்கு அல்லது 2018 மே 22 திகதி SS/03/12/05 இலக்கம் கொண்ட தென் மாகாண பிரதான செயலாளரின் சுற்றறிக்கைக்கு இணங்க அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 02 டிரக்டர் வண்டிகளின் திருத்த வேலைகளை மேற்கொள்ளப்படவுள்ளது என, வைபிரேட் ரோல் மற்றும் மோட்டார் கிரேடர் வேறொரு சபைக்கு வழங்குவதற்கு அல்லது பரிமாரிக்கொள்வதற்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | சுற்றறிக்கை ஏற்பாடுகளைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெலிகம நகர சபையில் கடமையாற்றும் 11 ஆரம்ப தர தொழிலாளர்களுக்கு பதவிக்குரிய குறித்தொதுக்கப்பட்ட கடமைகள் சாட்டுதல் மேற்கொள்ளப்படாமல் வேறு கடமைகள் சாட்டப்பட்டிருந்ததுடன், அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 5,065,950 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.<br>சேர்க்கப்பட்டிருந்த தொழிலாளர்களுக்குரிய குறிப்பிட்ட கடமைகள் சாட்டப்படாமையால் பொது மக்கள் நலனோம்பு, சுகாதார அலுவல்கள், வீதி பராமரிப்பு அலுவல்கள் உரியவாறு மேற்கொள்வதற்கு முடியாததுடன், சேர்க்கப்பட்ட குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்வதற்கு முடியாமல் உள்ளதெனவும் அவதானிக்கப்பட்டது. | சேவையின் தேவைப்பாட்டின் மீது கடமை சாட்டுதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என. | பதவிக்குரிய கடமை சாட்டுதல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |